CS (MAIN) EXAM, 2010

No. 318

D-DTN-K-UBB

# TAMIL
## Paper II
## (Literature)

*Time Allowed : Three Hours* | *Maximum Marks : 300*

*INSTRUCTIONS*

***Candidates should attempt questions 1 and 5 which are compulsory, and any THREE of the remaining questions, selecting at least ONE question from each Section.***

***All questions carry equal marks.***

***Answers must be written in Tamil.***

## SECTION A

1. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **மூன்றினைத்** தெரிவு செய்து ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *20×3=60*

(அ) "தலைவன் தலைவியரிடையே அரும்பும் காதல் மலர்ந்து, காய்ந்துக்கனிதற்குத் தோழி உறுதுணையாகிறாள்." குறுந்தொகைப் பாடல்கள் வழி இக்கூற்றை விளக்குக.

(ஆ) புறநானூற்றுப் பாடாண்
திணைப்பாடல்களின் கட்டமைப்பினையும், அவை உணர்த்தும் பண்பாட்டுப் பேருண்மைகளையும் சுருக்கி வரைக.

(இ) 'வேட்டுவவரியின்' தனிச்சிறப்புக்களைக் கூறுக.

(ஈ) இறைவன் திருவருளைத் திருப்புணையின் துணைகொண்டு, பிறவிப் பெருங்கடல் நீந்துதற்குத் தண்ணளி புரிந்து, பற்றறுதி அளித்தருள வேண்டும் என்று மனமுருகிப் பாடி அருளிய 'நீத்தல் விண்ணப்பத்தினால்' வெளிப்படும் மணிவாசகப் பெருமானின் பக்தித்திறத்தினைச் சுருக்கி வரைக.

**2.** திருக்குறள் ஓர் ஒப்பற்ற அரசியல் நுணுக்கக் களஞ்சியமாக ஒளிர்வதைச் சான்றுகளுடன் நிறுவுக. *60*

**3.** 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்திற்கு மெருகூட்டிய காண்டங்களில் சிறந்து நிற்பது மதுரைக்காண்டமே' என்னும் பொருள் பற்றி ஆராய்க. *60*

4. கீழ்க்காணும் பாடல்கள் வரும் இடம் சுட்டி, அவற்றுள் பொதிந்திருக்கும் பொருள் நலங்களைப் புலப்படுத்துக. *20×3=60*

(அ) "ஏசிறும், யான் உன்னை ஏத்தினும்
என் பிழைக்கே குழைந்து
வேசறுவேனை விடுதிகண்டாய்"

(ஆ) "எற்றைக்கும், ஏழ் ஏழ் பிறவிக்கும், உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட் செய்வோம்"

(இ) "எம் பெருமான் ! நந்தகோபாலா ! எழுந்திராய் !
எம் பெருமாட்டி ! யசோதாய் ! அறிவுறாய் !
உம்பர் கோமானே ! உறங்காது எழுந்திராய் !"

## SECTION B

5. பின்வரும் வினாக்களில் எவையேனும் **மூன்றினைத்** தெரிவு செய்து ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை எழுதுக : *20×3=60*

(அ) குடும்ப விளக்கின் மணிமுடியாகத் திகழும் முதியோர் காதல் பற்றிக் கலைமணம் கமழப் பாவேந்தர் உரைப்பன யாவை ?

(ஆ) கவிஞர் காமராசனின் 'கறுப்பு மலர்கள்' காட்டும் சமுதாயப் புறக்கணிப்பாளர்கள் பற்றி வரைக.

(இ) ஒரு நல்ல அங்கத நாடகத்திற்குரிய பண்புகள் அனைத்தும், சோவின் 'யாருக்கும் வெட்கமில்லை' என்னும் படைப்பில் அமைந்துள்ளனவா ? விளக்குக.

(ஈ) முத்துப் பட்டன் கதைப்பாடலின் பாடுபொருளின் தனிச்சிறப்பை எடுத்துக்காட்டுக.

6. 'ஆழ்வார்களும், நாயன்மார்களும் காட்டிய வழியில், பக்திப் பெருக்கு நிறைந்தவைகளே, மகாகவி பாரதியின் 'கண்ணன் பாட்டின்' காதற் கவிதைகள் என்பார் கூற்றை ஆராய்க. *60*

7. நாவலின் அடிப்படையாக, நாவலாசிரியன் சமுதாயத்துக்கு வெளியிடும் செய்தி அமைந்திருக்க வேண்டும். சமுதாயத்துக்குச் செய்தி இல்லாத நாவல், எலும்பில்லாத சதைப்பிண்டம் போன்றது' என்னும் அகிலனின் கருத்தை, அவரது 'சித்திரப்பாவை' வழி நின்று ஆராய்க. *60*

8. இயற்கைச் சூழ்நிலையில் கட்டுப்பாடின்று, காட்டுமலராகவும், மலையருவியாகவும் உணரச்சி வசப்பட்டு மக்கள் பாடிய பாடல்களாக கி.வ.ஜ., தொகுத்தளித்த 'மலையருவி' விளங்குவதைச் சான்றுகளுடன் விளக்கிக் கூறுக. *60*